The Hindu (English)
Dated : 21.03.2025

THE HINDU

# Free and fair

## ECI must not view calls for transparency as attempts to undermine it

The Election Commission of India (ECI) seems to have softened its stand about disclosing absolute numbers of booth-wise votes cast in elections. Last year, when the question arose in the midst of the multi-phase general election, the ECI took the position that it had no legal mandate to disclose details of Form 17-C, part one, which contains the total number of electors in each booth and those who had actually voted, to anyone other than the candidate or its polling agent. In a recent hearing, it has said the Chief Election Commissioner, Gyanesh Kumar, who took over recently, is open to meeting representatives of organisations and individuals who have sought a direction to the ECI to upload scanned, authenticated and legible copies of Form 17-C on its website. The Supreme Court of India has asked Trinamool Congress Member of Parliament Mahua Moitra and representatives of the Association for Democratic Reforms (ADR) to give a representation to the ECI and seek a meeting. While it may not mean that the ECI has already agreed to make absolute numbers of voters universally available, it may result in evolving a system of disclosure about turnouts, both in terms of numbers and percentages. In 2024, the ECI did release some details about turnout through its voter turnout app, but it also became a source of endless speculation as the percentages given were seen to be unusually higher than what was disclosed at the close of polling.

The prevalence of a difference of five to six percentage points between the turnout declared on polling day and subsequently revised figures, based on inputs from all booths, was noted at the end. This is normally explained as the result of a delay in collation of data from all booths, including those located in far-flung areas. However, the petitioners before the Court argue that Form 17-C is collected by available booth agents by hand, and it would not be a major problem for election officials to scan and upload it within 48 hours. The main grouse of political parties and activists is that the discrepancies, in the absence of the absolute number of votes cast but with only turnout percentages in hand, would raise suspicions about the whole process when the final results are released. The ECI has done well to offer to meet the petitioners on this question. There can be no dogmatic opposition to a procedural step to reduce the apprehension about any election being less than fair. It is futile to hold the position that every step demanding greater transparency in the electoral process is aimed at undermining its integrity or casting the process in a bad light. There ought to be a constant reassessment of existing procedures and practices to increase transparency and reduce the time taken to do so.

The Hindu (English)

Dated: 21.03.2025

# AIADMK files review petition in HC over party symbol

**The Hindu Bureau**
CHENNAI

The All India Anna Dravida Munnetra Kazhagam (AIADMK) and its general secretary Edappadi K. Palaniswami have filed a joint petition before the Madras High Court urging it to review an order passed on December 4, 2024 in a case related to a representation made against the party before the Election Commission of India (ECI).

A Division Bench of Justices R. Subramanian and C. Kumarappan on Thursday condoned the delay of six days in filing the review petition, after hearing the arguments advanced by senior counsel Vijay Narayan assisted by K. Gowtham Kumar, and directed the Registry to list the plea for hearing next week after numbering it.

The review petition, along with the application to condone the delay of six days, was filed in the Registry on January 24, 2025 but got listed for hearing only on Thursday. The order sought to be reviewed now was passed in a writ petition filed by an individual named S. Surya Moorthi in 2024. The writ petitioner had made a representation to the ECI on February 12, 2024 for freezing the 'two leaves' election symbol and sought a direction to the commission to conduct an inquiry on the basis of his representation and then take necessary action as he had prayed for.

The Bench led by Justice Subramanian had disposed of the writ petition on December 4, 2024 after recording the submission made by ECI counsel Niranjan Rajagopalan that the commission had already issued notices to the parties concerned and that it would dispose of the representation within four weeks.

However, in its review petition, AIADMK argued that the ECI did not even have the jurisdiction to entertain such a representation when there was no split in the party and therefore, it ought not to have told the court that it would take a decision on the issue within four weeks.

Deccan Chronicle

Dated: 21.03.2025

# POLL ROLL TO BE LINKED TO BIRTH, DEATH DATA

VINEETA PANDEY | DC
NEW DELHI, MARCH 20

While the Election Commission (EC) has begun working to remove the duplicate elector photo identity cards (Epic) with the help of Unique Identification Authority of India (UIDAI), chief election commissioner Gyanesh Kumar on Thursday also ordered a regular updation of the voter list across the country in close coordination with the birth and death registration authorities. This will help clean up the voter database, which has many dead voters who remain on the list.

A crowd rationalisation of polling stations has already begun, ensuring that no more than 1,200 voters can cast their votes at a single centre. Sources indicate that even the most remote rural polling stations will be equipped with basic facilities.

The CEC has also directed all 36 CEOs, 788 DEOs, and 4,123 EROs to hold regular all-party meetings and interactions. These meetings. ■ P8

# EC: Voter list to be strengthened with birth and death records

FROM PG 1

In the Commission's interactions with political parties, it was clarified that any inclusion or deletion to the draft elector list is governed by the process of appeals under relevant legal provisions for filing claims and objections, available to all political parties in the Representation of People act, 1950. In the absence of such appeals, the list as prepared by the ERO prevails.

Accordingly, the polling agents and booth agents of political parties will be apprised of the legal framework of objections and appeals on correction of entries and inclusion of names in electoral rolls.

"The offer of the Commission to train political party representatives and their appointed BLAs on the due processes as per electoral laws including claims and objections to the voter list has been welcomed by political parties. The ECI has also invited suggestions from all political parties on any and all matters concerning the conduct of elections and they can send these by April 30. The parties have also been extended an invitation to meet the Commission in Delhi at a mutually convenient time," ECI officials said.

Officials said digital training kits in multiple Indian languages will be prepared for easy absorption and effective training of frontline functionaries. Animated videos and integrated dashboard will provide a digital push to training. A training module is being devised to train BLOs in days to come.

The Times of India

Dated: 21.03.2025

## EC may link voter list with birth, death registers

Election Commission, moving towards a system of constant updation of rolls by weeding out dead voters and ensuring that all citizens above 18 years of age are enrolled, shall be linking the voters list with the register of births and deaths in the time to come. P7

# EC to link voter rolls to birth & death databases

Bharti.Jain@timesofindia.com

New Delhi: The Election Commission, moving towards a system of constant updation of rolls by weeding out dead voters and ensuring that all citizens above 18 years of age are enrolled, shall be linking the voters' list with the register of births and deaths in the time to come.



The Registration of Births and Deaths (Amendment) Act, 2023, allows for making the database of registered births and deaths, maintained by the Registrar General of India (RGI), available to authorities dealing with the preparation or maintenance of database related to the electoral rolls, in addition to the population register, Aadhaar number, ration card, passport, driving licence, property registration etc.

Specifically for the electoral rolls, the Act adds that the preparation or maintenance of database related to the rolls shall be without prejudice to the provisions of the Representation of the People Act, 1950. Once electoral rolls are linked with the registered births and deaths database, citizens who attain 18 years of age can automatically get added to the voters' list, provided they meet all other criteria for enrolment. Similarly, deaths registered in the database maintained by the RGI can be used for automatic deletion of deceased voters from the rolls. This will ensure that the voters' list is in a constant state of updation.

At present, separate statutory forms must be filled by a new voter wanting to enrol or for removing a dead voter, which also requires verification through a death certificate. Updation of rolls is done annually, though special summary revision is done prior to an election.

"Regular updation of the voters' list shall be strengthened in close coordination with the birth and death registration authorities," an EC press release said, announcing the impending electoral reform that is latest in a series of six to seven reforms introduced after chief election commissioner **Gyanesh Kumar** took charge of poll panel.

D.T.Next

Dated: 21.03.2025

# Give birth, death docus for rolls: EC

**NEW DELHI: Amid a debate on the purity of electoral rolls, the Election Commission said on Thursday that the regular updating process of the voter list will be strengthened in close coordination with the birth and death registration authorities.**

Technical consultations between the Unique Identification Authority of India (UIDAI) and experts of the EC will begin soon on voter list-Aadhaar linkage, it said, adding that though an elector can only vote in the assigned polling booth and nowhere else, the poll body has resolved to remove duplicates countrywide and end a decades-long issue within three months.

"Regular updation of the voter list shall be strengthened in close coordination with the birth and death registration authorities," the EC said in a statement. In the EC's interactions with political parties, it was clarified that any inclusion or deletion in the draft elector list is governed by the process of appeals under relevant legal provisions for filing claims and objections available to all political parties in the Representation of People act, 1950.

In the absence of such appeals, the list as prepared by the electoral registration officer (ERO) prevails. The poll authority also said it has charted out "bold steps" towards strengthening election processes.

Daily Thanthi
Dated: 21-03-2025

நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவை அதிகப்படுத்த

# அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளுக்குள் வாக்குச்சாவடி

## இந்திய தேர்தல் கமிஷன் அறிவிப்பு

சென்னை, மார்ச்.21-
நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவை அதிகப்படுத்த, அங்குள்ள அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளுக்குள் வாக்குச்சாவடி அமைக்கப்படும் என்று இந்திய தேர்தல் கமிஷன் அறிவித்து உள்ளது.

### போலி பதிவுகள்

இதுகுறித்து இந்திய தேர்தல் கமிஷன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

அனைத்து வாக்காளர்களும் வாக்கு செலுத்துவதை உறுதி செய்யும் நடவடிக்கைகளை இந்திய தேர்தல் கமிஷன் மேற்கொண்டுவருகிறது. இதில் அரசியல் கட்சிகளையும் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியில் தேர்தல் கமிஷன் ஈடுபட்டுள்ளது. இந்தியாவில் சுமார் 100 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.

இந்தியா முழுவதும் வாக்காளர் பட்டியலில் உள்ள போலி வாக்காளர் பெயர்களை 3 மாதங்களுக்குள் நீக்க தேர்தல் கமிஷன் தீர்மானித்து உள்ளது. இதற்காக பிறப்பு, இறப்பு பதிவு அதிகாரிகளுடன் இணைந்து செயல்படுவோம்.

### அடுக்குமாடி குடியிருப்பு

அனைத்து வாக்காளர்களையும் எளிதாக வாக்களிக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் எங்களின் நோக்கம். 2 கி.மீ. இடைவெளிக்குள் வாக்குச்சாவடிகளை அமைக்கவும், ஒரு வாக்குச்சாவடிக்கு 1,200 வாக்காளர் என்ற விகிதத்தில் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஊரகத்தின் கடைசி எல்லையில் உள்ள வாக்குச்சாவடியிலும் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும். நகர்ப்புறங்களில் வாக்குப் பதிவை அதிகப்படுத்த, அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளுக்குள் வாக்குச்சாவடி அமைக்கப்படும்.

### கட்சிகளின் கருத்து

தேர்தல் கமிஷனின் நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்க கடந்த 4 மற்றும் 5-ந் தேதியில் தேசிய அளவில் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தேர்தல் கமிஷனின் நடவடிக்கைகள் பற்றிய பல்வேறு அறிவுறுத்தல்களுடன் கூடிய டிஜிட்டல் பயிற்சிகள், அனைத்து இந்திய மொழிகளிலும் உருவாக்கப்படும். வாக்குச்சாவடி அளவிலான அலுவலர்களுக்கு அவை அளிக்கப்படும்.

தேர்தல் நடவடிக்கைகள் பற்றி தெரிந்துகொள்ள அனைத்து கட்சிகளையும் அழைத்துப்பேசும்படி மாநில தலைமை தேர்தல் அதிகாரி உள்ளிட்டோருக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது. அரசியல் கட்சிகள் எழுப்பும் அனைத்து பிரச்சினைகளும் உடனுக்குடன் தீர்த்து வைக்கப்படும்.

இதுபற்றி அரசியல் கட்சிகளின் கருத்தை கேட்டுள்ளோம். அடுத்த மாதம் ஏப்ரல் 30-ந் தேதிக்குள் அவர்கள், தேர்தல் நடைமுறைகள் குறித்த கருத்துகளை அனுப்பி வைக்க வேண்டும். டெல்லியில் நடக்கும் கூட்டங்களில் பங்கேற்கவும் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

Daily Thanthi

Dated: 21.03.2025

அ.தி.மு.க. சின்னம் தொடர்பான வழக்கில்

# எடப்பாடி பழனிசாமியின் மறுஆய்வு மனு விசாரணைக்கு ஏற்பு

## ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, மார்ச்.21-
அ.தி.மு.க., சின்னம் தொடர்பான வழக்கில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்ய கோரி எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்று ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

### சின்னம்

திண்டுக்கல்லைச் சேர்ந்த சூர்யமூர்த்தி என்பவர், சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "அ.தி.மு.க., தொண்டராகிய நான், எங்கள் கட்சியின் நிர்வாகிகள் பதவிகள் உள்ளிட்டவைகள் குறித்து சிவில் வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்குகளின் விசாரணை முடியும் வரை நாடாளுமன்ற தேர்தலின்போது, அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலை சின்னம் வழங்கக்கூடாது என்று தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, மனுதாரர் இதுகுறித்து ஏற்கனவே கொடுத்த கோரிக்கை மனுவை 4 வாரத்துக்குள் தேர்தல் ஆணையம் பரிசீலிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

### உள்கட்சி பிளவுகள்

அப்போது, இந்த வழக்கில் ஒரு எதிர்மனுதாரராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் தங்கள் தரப்பு கருத்தையும் கேட்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததால், அனைத்து தரப்பு கருத்துக்களையும் கேட்டறிய தேர்தல் ஆணையத்துக்கு ஐகோர்ட்டு உத்தரவிட்டிருந்தது. இதையடுத்து, புகழேந்தி உள்ளிட்டோர் தங்கள் கருத்துக்களை கேட்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தில் மனு கொடுத்தனர்.

இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின், தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீட்டு பிரிவுகளின் கீழ் அ.தி.மு.க.வில் உள்கட்சி பிளவுகள் ஏதேனும் இருக்கிறதா? என்பதை முதலில் விசாரித்து, அதில் திருப்தியடைந்த பிறகே விசாரணையை தொடர வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

### மறுஆய்வு மனு

இந்த உத்தரவு புகழேந்தி உள்ளிட்டோருக்கு எதிரான வழக்கில் பிறப்பிக்கப்பட்டது. இதே உத்தரவை, சூர்யமூர்த்தி வழக்கிற்கும் பொருந்தும் விதமாக மாற்றி அமைக்க எடப்பாடி பழனிசாமி தரப்பில் முடிவு செய்யப்பட்டது. இதற்காக அந்த உத்தரவை மறுஆய்வு செய்ய கோரி சென்னை ஐகோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால், அதை விசாரணைக்கு ஏற்க வேண்டும் என்று ஐகோர்ட்டு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்சில் எடப்பாடி பழனிசாமி தரப்பில் மூத்த வக்கீல் விஜய்நாராயண் ஆஜராகி வாதிட்டார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், மறுஆய்வு மனுவை விசாரணைக்கு பட்டியலிட ஐகோர்ட்டு பதிவுத்துறை பதிவாளருக்கு உத்தரவிட்டனர்.

Dinamalar
Dated: 21.03.2025

# பிறப்பு, இறப்பு பதிவு அடிப்படையிலேயே வாக்காளர் பட்டியலில் மாற்றம் செய்ய முடிவு

**தேர்தல் நடைமுறையை வலுவானதாக மாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க, தேர்தல் கமிஷன் உறுதியாக உள்ளது. வரும், 31ம் தேதிக்குள் அடிப்படையான பிரச்னைகளை தீர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது**

**புதுடில்லி, மார்ச் 21–**
வாக்காளர் பட்டியலின் உண்மைத்தன்மை குறித்து, நாடு முழுதும் விவாதம் எழுந்துள்ள நிலையில், 'வாக்காளர் பட்டியலில் இனிமேல் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருந்தால், அது, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு அடிப்படையில் தான் இருக்கும்' என, தேர்தல் கமிஷன் நேற்று கூறியுள்ளது.

இதுகுறித்து, தேர்தல் கமிஷன் நேற்று வெளியிட்ட அறிவிப்பில் கூறியுள்ளதாவது:

ஓட்டளிப்பதை வாக்காளர்களுக்கு இனிமையான தருணமாக மாற்ற முடிவு செய்துள்ளோம். அதிகபட்சம், 1,200 வாக்காளர்களுக்கு மேற்பட்டு எந்த ஓட்டுச்சாவடியும் இருக்கக் கூடாது என்பதில் கவனமாக உள்ளோம்.

அதுபோல, அதிக மக்கள் குடியிருக்கும் அடுக்கு மாடி குடியிருப்புகள், காலனிகளிலும் ஓட்டுப்பதிவு மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

அரசியல் கட்சிகளுடன் தேர்தல் கமிஷன் மேற்கொண்ட ஆலோசனையின் படி, வாக்காளர் பட்டியலில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருந்தால், அது சட்டப்பூர்வமாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. அதன்படி, வாக்காளர் பட்டியலில் செய்யப்பட உள்ள மாற்றங்கள், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு அடிப்படையில் தான் இருக்கும்.

இந்த விவகாரத்தில், அந்த துறை அதிகாரிகளுடன் இணைந்து, தேர்தல் கமிஷன் செயல்படும். மாற்றங்கள் செய்யப்படத் தேவையில்லை எனும் போது, இப்போதைய வாக்காளர் பட்டியலே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

தேர்தல் நடைமுறையை வலுவானதாக மாற்றத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க, தேர்தல் கமிஷன் உறுதியாக உள்ளது.

மாநில தேர்தல் அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அதிகாரிகள் போன்றோர் அடிக்கடி சந்தித்து பேசி, வரும் 31ம் தேதிக்குள் அடிப்படையான பிரச்னைகளை தீர்க்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

ஆதார் அடையாள அட்டை எண்ணுடன் வாக்காளர் பட்டியலை இணைப்பதற்கான நடைமுறைகளை ஆராய, ஆதார் ஆணையத்துடன் தேர்தல் கமிஷன் விரைவில் ஆலோசனை மேற்கொள்ள உள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Dinakaran
Dated: 21.03.2025

# பிறப்பு, இறப்பு பதிவு அதிகாரிகளுடன் இணைந்து வாக்காளர் பட்டியல் புதுப்பிப்பு

## தேர்தல் ஆணையம் அறிக்கை

புதுடெல்லி, மார்ச் 21: இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு துறை அதிகாரிகளுடன் ஒத்துழைப்புடன் வாக்காளர் பட்டியலை புதுப்பிப்பிக்கும் செயல்முறை வலுப்படுத்தப்படும். ஒரு வாக்காளர் ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடியில் மட்டுமே வாக்களிக்க முடியும்.

இது தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் தேர்தல் ஆணையம் ஆலோசனைகளை நடத்தியது. தேர்தல் செயல்முறைகளை வலுப்படுத்துவதற்கான தைரியமான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் வகுத்துள்ளது.

ஒரு வாக்காளர் ஒதுக்கப்பட்ட வாக்குச் சாவடியில் மட்டுமே வாக்களிக்க முடியும். வேறு எங்கும் வாக்களிக்க முடியாது. நாடு முழுவதும் போலி வாக்காளர்களை நீக்கவும், பல தசாப்தங்களாக நிலவும் பிரச்னையை மூன்று மாதங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவரவும் தேர்தல் ஆணையம் தீர்மானித்துள்ளது.

மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் அதிகாரிகள் உட்பட கிட்டத்தட்ட 5,000 தேர்தல் அதிகாரிகள் மார்ச் 31ம் தேதிக்குள் அரசியல் கட்சிகளுடன் கூட்டங்களை நடத்துவார்கள்.

வாக்காளர் பட்டியல்-ஆதார் இணைப்பு குறித்து இந்திய தனித்துவ அடையாள ஆணையம் மற்றும் தேர்தல் ஆணைய நிபுணர்களுக்கு இடையேயான ஆலோசனைகள் விரைவில் தொடங்கும்.

Dinakaran

Dated: 21-03-2025

### இரட்டை இலை ஒதுக்க எதிர்ப்பு தெரிவித்த

# வழக்கின் உத்தரவை மறு ஆய்வு செய்யக்கோரி அதிமுக மனு

சென்னை, மார்ச் 21: அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாக நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை அதிமுகவுக்கு இரட்டை இலைச்சின்னம் ஒதுக்க எதிர்ப்பு தெரிவித்த வழக்கில் பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி அதிமுக தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாக நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை அக்கட்சிக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்க கூடாது என்று தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரி திண்டுக்கல்லை சேர்ந்த சூர்ய மூர்த்தி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

## ஐகோர்ட்டில் தாக்கல்

இந்த வழக்கு விசாரணையின் போது, சூர்ய மூர்த்தி அளித்த விண்ணப்பத்தை 4 வாரங்களில் பரிசீலிப்பதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை பதிவு செய்து கொண்ட உயர் நீதிமன்றம் வழக்கை முடித்து வைத்தது.

இதற்கிடையே இரட்டை இலை சின்னம், உட்கட்சி விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையம் அனுப்பிய நோட்டீசை எதிர்த்து அதிமுக, பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி சார்பில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீட்டு உத்தரவின் அடிப்படையில் கட்சியில் பிளவுகள் உள்ளதா என்று திருப்தி அடைந்த பிறகே விசாரணையை தொடர வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீட்டு உத்தரவின்படி மட்டுமே விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அதிமுக தொடர்ந்த வழக்கில் பிறப்பித்த உத்தரவை, சூர்ய மூர்த்தி தொடர்ந்த வழக்கில் பிறப்பித்த உத்தரவில் சேர்க்க கோரி அதிமுக தரப்பில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட தாமதத்தை பொறுத்து, மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் மனுவில் முறையிடப்பட்டிருந்தது.

தாமதத்தை அனுமதிக்க கோரிய மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், சி.குமரப்பன் அடங்கிய அமர்வு, மனுவை எண்ணிட்டு விசாரணைக்கு பட்டியலிடுமாறு உயர் நீதிமன்ற பதிவுதுறைக்கு உத்தரவிட்டது.